**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 190 of 2019

Depositions of PW -5 witness for ________ Prosecution / Defence / Court

Name : பரத்குமார்

Father's Name : இலச்சியப்பகவுண்டர்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of January** 2026.

**(எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் கோவை செஞ்சேரி மலையில் குடியிருந்து கொண்டு ட்ரான்ஸ்போர்ட் மேனேஜராக வேலை பார்த்து வருகிறேன். தேதி, மாதம் மற்றும் வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பாக மதியம் சுமார் 12.00 முதல் 01.00 மணிக்குள்ளாக நாங்கள் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த பொழுது அவதியாக வந்த பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த செயினை ஒருவர் அறுத்துக் கொண்டு சென்றார். மேற்படி பெண் சத்தம் போட நாங்கள் பார்த்த பொழுது மேற்படி நபர் இருசக்கர வாகனத்தில் சென்று விட்டார். அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் அவரை நான் நேரடியாக பார்த்தேன். பின்னர் இது சம்பந்தமாக புகார் கொடுத்து இருப்பதாகவும் போலீசார் எங்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் நாங்கள் விளையாடிக் கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 முதல் 150 அடி இருக்கும். சம்பவ இடத்திலிருந்து சூலூர் காவல் நிலையம் சுமார் ஒரு கிலோமீட்டருக்குள் இருக்கும். மேற்படி செயினின் எடை எனக்கு தெரியாது. மேற்படி எதிரி வந்ததாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண் மற்றும் மாடல் ஞாபகம் இல்லை, ஆனால் கருப்பு நிற வண்டி. சம்பவத்தின் பொழுதுதான் சாட்சிகள் தெய்வானை மற்றும் அங்கண்ணன் இருவரையும் தெரியும். அதற்கு முன்பாக இருவரையும் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த அன்றே காவல் நிலையத்தில் புகார் கொடுத்து என்னை விசாரித்தார்களா என்றால் சரியல்ல, இரண்டு நாட்கள் கழித்துதான் விசாரித்தார்கள். நான் சொல்வது போல் உண்மையாக சம்பவம் நடைபெற்றிருந்தால் அன்றைய தினமே காவல் நிலையம் சென்று புகார் கொடுத்து இருப்பார்கள் என்றும் நானும் உடன் சென்று இருப்பேன் என்றும் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறாததால் தான் காவல் நிலையம் உடனடியாக சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் நான் அவர்களை காப்பாற்றி அனுப்பி வைத்தேன். பின்னர் புகார் கொடுத்ததாக தெரிவித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.01.12 18:44:00 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**